பேரூராட்சிகளின் இயக்குநர் சென்னை-28, அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை:- திரு.கிரண் குராலா, இ.ஆ.ப.,

ந.க.எண். 3335/2023/அ6 நாள்: 24.03.2023

பொருள் : பணியமைப்பு – பேரூராட்சிகள் நிர்வாகம் – கருணை அடிப்படையில் பணி நியமனம் – ஈரோடு மண்டலம் – திருப்பூர் மாவட்டம் – ஊத்துக்குளி பேரூராட்சி முன்னாள் செயல் அலுவலர்– அண்ணாமலை (திரு). அ – 08.01.2018–ல் பணியிடைக் காலமானார் – வாரிசுதாரரும் மகனுமாகிய அரவிந்த் (திரு).அ என்பவரை கருணை அடிப்படையில் குன்னத்தூர் பேரூராட்சியில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்டது – 06.03.2019 பிற்பகல் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்தது – பணிவரன்முறை செய்தல் – ஆணையிடப்படுகிறது

பார்வை :
1. திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவரின் செயல்முறைகள் ந.க.எண்.104(தி)/2018/ப2, நாள்.04.03.2019
2. அரசாணை (நிலை)எண்.48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1)துறை, நாள். 26.02.2021
3. திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவரின் கடிதம் ந.க.எண்.2048/2023/ப2 , நாள். 28.02.2023

******

ஆணை:-

ஈரோடு மண்டலம், திருப்பூர் மாவட்டம், ஊத்துக்குளி பேரூராட்சியில் செயல் அலுவலராக பணிபுரிந்து 08.01.2018–ல் பணியிடை காலமான திரு.அ.அண்ணாமலை என்பவரின் வாரிசுதாரரும் மகனுமாகிய திரு.அ.அரவிந்த் என்பவருக்கு பார்வை 1–ல் காணும் திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவரின் செயல்முறைகளின்படி கருணை அடிப்படையில் திருப்பூர் மாவட்டம், குன்னத்தூர் பேரூராட்சியில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்து உத்திரவிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில் தனியர் 06.03.2019 பிற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

அதனை தொடர்ந்து கருணை அடிப்படையில் பணி நியமனம் பெற்ற திரு.அ.அரவிந்த் என்பவரது பணியினை வரன்முறை செய்யக் கேட்டு பார்வை 3–ல் காணும் திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவரிடமிருந்து பரிந்துரை செய்து கருத்துரு வரப்பெற்றுள்ளது. அதனடிப்படையில் இந்நேர்வில் பரிசீலிக்கப்பட்டதில் பார்வை 2–ல் காணும் அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு(கியூ) துறை, நாள்.26.02.2021–ல்

வெளியிடப்பட்ட வழிமுறைகளின்படி நியமன அலுவலருக்கு ஒரு நிலை கூடுதல் அதிகாரம் பெற்ற பேரூராட்சிகளின் இயக்குநர் நிலையிலேயே இந்நேர்வில் பணிவரன்முறை செய்யலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்காணும் விவரங்களின் அடிப்படையில் திருப்பூர் மாவட்டம், குன்னத்தூர் பேரூராட்சியில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வரும் திரு.அ.அரவிந்த் என்பவரது பணியினை அவர் பணியில் சேர்ந்த நாள் முதல் கீழ்க்காணும் விபரப்படி பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

| வ. எண் | பணியாளர் பெயர் / பணியாளர் நிலை | பணிபுரியும் பேரூராட்சி | பணியில் சேர்ந்த நாள் | பணி வரன்முறை செய்த நாள் |
|---|---|---|---|---|
| 1 | திரு.அ.அரவிந்த்<br>இளநிலை உதவியாளர் | குன்னத்தூர் பேரூராட்சி | 06.03.2019 பி.ப | 06.03.2019 பி.ப |

மேலும் இப்பொருள் தொடர்பாக உரிய நடவடிக்கை மேற்கொண்டு தனியரது பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகளை மேற்கொள்ளவும் மற்றும் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டமைக்கான பணிப்பதிவேட்டின் நகலினை இவ்வியக்ககத்திற்கு அனுப்பிடவும் ஈரோடு மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரை கேட்டுக் கொள்ளப்படுகிறது.

//உண்மை நகல்//

ஒம்/-கிரண் குராலா
இயக்குநர்

செயல் அலுவலர்
குன்னத்தூர் பேரூராட்சி
திருப்பூர் (மா) - 638 103

பெறுநர்
திரு.அ.அரவிந்த்
இளநிலை உதவியாளர்
குன்னத்தூர் பேரூராட்சி
திருப்பூர் மாவட்டம்
(ஈரோடு மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் வாயிலாக)

நகல்:-

1. மாவட்ட ஆட்சித்தலைவர், திருப்பூர் மாவட்டம்
2. பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், ஈரோடு மண்டலம்
3. செயல் அலுவலர், குன்னத்தூர் பேரூராட்சி
4. அ6 இருப்பு கோப்பு

/உத்தரவுப்படி/

24.3.2023
இணை இயக்குநர்(பொது)

24/03/2023